பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 05 | சனிக்கிழமை | 18.01.2025 | அதிர்வு 169

## யாழ்ப்பாணம் வந்த இந்தியத் தூதுவர்

### நிகழ்வுகளில் பங்கேற்பு



(ந.லோகதயாளன்)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று

06




# ஈழத்தமிழர்களின் இறைமையை நிலைநாட்ட ‘சமஷ்டி’யே வேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியத்தினரிடம் சிறீதரன் எம்.பி. எடுத்துரைப்பு




ஈழத்தமிழர்களின் அரசியல் உரித்துகளை நிலைநாட்ட சமஷ்டி முறையிலான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வே காலத்தின் தேவையானது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி., ஐரோப்பிய ஒன்றியத்தினரிடம் வலியுறுத்தியுள்ளர்.

05

## தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அநுர அரசின் இனவாதம் அம்பலம்!

### கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



(எஸ்.ரகுதீஸ்)

“வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடி கைது செய்யப்பட்டவர்களை அரசியல் கைதிகளாக கணிக்க முடியாது என்று தேசிய மக்கள் சக்தியின் நீதி அமைச்சர் அறிவிப்பதற்கு ஒரே காரணம் இனவாதம் தான்.““

– இவ்வாறு தமிழ்த்

05

## கோட்டாவை 3 மணிநேரம் துருவிய சி.ஐ.டி.



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்று

06




நேற்று முன்தினம் மன்னாரில் நீதிமன்ற முன்றிலில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் முழு இலங்கையையும் பெரும் பரபரப்பில் ஆழ்த்தியது. இந்தக் கொடூரம் தொடர்பில் பொலிஸாரின் திறமையின்மை மீது பல தரப்பினாலும் கடும் காட்டம் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும், இந்த விடயத்தில் குறுகிய காலத்தில் பொலிஸ் புலனாய்வுத்துறை ஒரு Break through கண்டிருப்பதாக மன்னார்ச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்திய இருவரில் ஒருவரை பொலிஸ் புலனாய்வுத்துறை மடக்கிவிட்டதான ஒரு தகவல் கிட்டியுளது. முன்னாள் இராணுவச் சிப்பாயான இந்த நபர் படையிலிருந்து ஓய்வு பெற்றவர். இவரே கூலி பட்டாளமாக வியாழனன்று களத்தில் இறங்கி அடாவடித்தனம் பண்ணினார் என்று கூறப்படுகின்றது. இந்தியாவுக்குத் தப்பிச் செல்வதற்காக மன்னாரை அண்டி ஒளித்து இருந்த இவரை பாதுகாப்புத் தரப்பினர் துருவித் தேடி மடக்கிவிட்டனர் என்றும்,

05





# பாரம்பரிய பொங்கல் நிகழ்வு காலத்தின் கட்டாய தேவை!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் சுட்டிக்காட்டு

"எங்கள் பண்பாடுகளும், பழக்கவழக்கங்களும் மாறிக் கொண்டும் மருவிக்கொண்டும் செல்லும் இந்தக் காலத்தில் பாரம்பரிய பொங்கல் நிகழ்வுகள் தேவையானதே." – என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளை யாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற் பாட்டில் வடக்கு மாகாண பொங்கல் விழா மாதகல் நுணசை முருகமூர்த்தி கோயிலில் நேற்று வெள்ளிக்கிழமை நடை பெற்றது.

விருந்தினர்கள் ஆலய வழிபாட்டில் கலந்துகொண்ட பின்னர் பாரம்பரிய முறைப்படி அழைத்துச் செல்லப்பட்டு சடங்காசார முறைப்படி புதிதெடுத்தல் நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அதை ஆலயத்துக்கு எடுத்து வந்து, நெல்லை உரலிலிட்டு அதனை அரிசியாக்கி பொங்கல் பொங்கும் நிகழ்வு நடைபெற்றது. சிறப்பாக 51 பானைக ளில் பொங்கல்கள் பொங்கப்பட்டன. இதன் பின்னர் மேடை நிகழ்வுகள் நடைபெற்றன. மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட இசைக் கருவிகள் கலை மன்றங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

வடக்கு மாகாண ஆளுநர் தனது பிரதமர் விருந்தினர் உரையில், 1996ஆம் ஆண்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலராகப் பணியாற்றியமையும் அதன்போது இந்தப் பகுதிகளுக்கு வரமுடியாத நிலைமை இருந்தமையையும் சுட்டிக்காட்டினார்.

28 ஆண்டுகளின் பின்னர் இங்கு வந்து பாரம்பரிய முறையில் இடம்பெறும் பொங்கல் நிகழ்வில் பங்கேற்பது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அதேவேளை பொங்கல் நிகழ்வுக்காக வயலும், கோயிலும் சூழ்ந்த அமைதியான இடத்தை தெரிவு செய்து நிகழ்வை ஒழுங்கமைத்த அனைவரையும் ஆளுநர் பாராட்டினார்.

விவசாயிகளுக்கு இன்று காலநிலை மாற்றம் சவாலாகி வருவதாகக் குறிப்பிட்ட ஆளுநர், விவசாயிகளின் முயற்சி ஒருபோதும் வீணாகாது என்றும், அவர்களுக்கு அதற்குரிய பலன் நிச்சயம் கிடைத்தேதீரும் எனவும் தெரிவித்தார்.

விவசாயத்தை வருமானம் அதிகம் தரக்கூடிய துறையாக மாற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்ட ஆளுநர், இன்றைய இளையோருக்கு விவசாயத்தின் மீதான நாட்டம் குறைந்து வருவதாகவும் தெரிவித்தார்.

அரசாங்க வேலையே வேண்டும் என இளையோர் கோரி நிற்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர், ஓய்வூதியம் மற்றும் பணிச் சுமை குறைவான வேலை என அதை அவர்கள் தெரிவு செய்கின்றார்களோ தெரியவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

தாம் நிர்வாக சேவைக்கு நுழைந்த காலத்தில் தொலைத் தொடர்பு வசதிகளோ ஏனைய வசதிகளோ இல்லை என்றும் மிகக் கஷ்டமான காலத்திலும் மனநிறைவான, சந்தோசமான பணியையாற்றியதாகவும் குறிப்பிட்ட ஆளுநர் இன்று பல வகையான வசதிகள் இருந்தும் மக்களுக்கு சிறப்பான சேவை கிடைக்கவில்லை எனவும் வேதனை வெளியிட்டார்.

அரசாங்க வேலை கிடைத்தவுடன் தமது வீட்டுக்குப் பக்கத்தில் பணியிடம் கேட்கும் போக்கே இன்று அதிகமாகக் காணப்படுவதாகக் குறிப்பிட்ட ஆளுநர், அந்த நிலைமையில் மாற்றம் தேவை எனவும் சுட்டிக்காட்டினார்.

குடும்பம் முக்கியமானது எனத் தெரிவித்த ஆளுநர், அரச பணியைப் பெற்றுக்கொண்டால் அதையும் சிறப்பாக செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நல்லது செய்தால் நிச்சயம் நல்லதே நடக்கும் எனத் தெரிவித்த ஆளுநர், வடக்கு மாகாணத்தின் முன்னேற்றத் துக்கும் செழிப்புக்கும் அனைவரும் ஒன்றிணைந்து பணி யாற்றவும் அழைப்பு விடுத்தார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளை யாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ் வில், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவனும், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழக னும் கலந்துகொண்டனர்.
















# மத்தளை விமான நிலைய குத்தகை விவகாரம் தொடர்பில் மீளவும் ஆய்வு

மத்தளை சர்வதேச விமான நிலையத்தின் நடவடிக்கைகளை இரண்டு இந்திய மற்றும் ரஷ்ய நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் மீண்டும் ஆராய்வதற்கு துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளை ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்ட இந்திய நிறுவனம் தற்போது அமெரிக்காவினால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் ருவன் கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலைமையின் கீழ் விமான நிலையத்தின் செயற்பாடுகளை அந்த நிறுவனத்திடம் ஒப்படைப்பது சிக்கலாக மாறியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நடவடிக்கைகளின் இலாபத்தை பகிர்ந்துகொள்வது தொடர்பான நிபந்தனைகளும் அரசாங்கத்திற்கு பாதகமாக அமைந்துள்ளதாக பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய இந்த தீர்மானம் ஆய்வு செய்யப்பட்டு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் முன்வைக்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

மத்தளை விமான நிலையத்தின் நடவடிக்கைகள் தற்போது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தால் முன்னெடுக்கப்படுகின்றன.

தற்போது வாரத்திற்கு ஒரு விமானம் மாத்திரமே விமான நிலையத்தில் தரையிறங்குவதாக சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ருவன் கொடிதுவக்கு தெரிவித்தார்.

# 100 மில்லி மீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை




வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், மாத்தளை, நுவரெலியா, பொலன்னறுவை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும், ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் மணித்தியாலத்திற்கு 30 - 40 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் ஆபத்துகளைத் தவிர்க்கும் வகையில் பொதுமக்கள் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டளவியல் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



# சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சிச்சுவான் மாகாண செயலாளரை சந்தித்தார் ஜனாதிபதி அநுரகுமார

சீனாவிற்கு 4 நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சிச்சுவான் மாகாண சீன கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் வேங்க் சியூ/ஹய் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

பொருளாதார முன்னேற்றத்தில் முன்னணியில் இருக்கும் சீனாவின் சிச்சுவான் மாகாணத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் இந்த சந்திப்பின் மூலம் புதிய மட்டத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சிச்சுவான் மாகாணத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதாரம், வர்த்தகம், கலாசாரம், சுற்றுலாத் துறை மட்டுமன்றி அரசுகளுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் அவற்றை புதிய நிலைக்கு உயர்த்துவது குறித்து இந்த சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

எரிசக்தி உட்பட பல துறைகளில் சிச்சுவான் மாகாணம் அடைந்துள்ள சாதனைகளை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளுமாறு மாகாண செயலாளருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

இலங்கை தற்போது பொருளாதார ரீதியாக ஸ்திரமடைந்து வருவதாகவும் வெளிப்படையான ஆட்சியின் கீழ் முதலீட்டுக்கு மிகவும் சாதகமான சூழல் தற்போது நாட்டில் இருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது கூறியுள்ளார்.

இலங்கை தற்போது அரசியலில் ஒரு திருப்புமுனையில் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, வடக்கு, கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு மக்கள் ஒன்றிணைந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கி தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவந்துள்ளதாகவும் அந்த ஆணையின் ஊடாக மக்கள் தங்கள் மீது வைத்திருக்கும் எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்ற அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதாகவும் ஜனாதிபதி இந்த சந்திப்பில் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.











## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் கொடூரம் பற்றிய முழு விவரங்களும் அடுத்து விரைவில் கட்டவிழும் என எதிர்பார்க்கலாம் என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரம் ஒன்று நம்பிக்கை தெரிவித்தது.

+ + +

எழுச்சியும் வீழ்ச்சியும் அரசியலில் தவிர்க்க முடியாதவை. 2005 முதல் 2014 இறுதிவரை ஆட்சிப் பீடத்தை ஆட்டிப் படைத்த ராஜபக்ஷக்கள் 2015 அரசியலில் இருந்தே துடைத்தெறியப்பட்டனர். அவர்களின் மீள் வருகைக்கு இனி இடமேயில்லை என்றுதான் பலரும் கருதினர். ஆனால் 2018 உள்ளூராட்சி தேர்தலில் மொட்டுக் கட்சியாகப் புனர்ஜென்மம் எடுத்த ராஜபக்ஷக்கள் அணி 2019 ஜனாதிபதி தேர்தல் மற்றும் 2020 பொதுத் தேர்தல்களில் அளப்பரிய வெற்றியை சாதித்தது. ஆயினும் இரண்டு, இரண்டரை ஆண்டுகளில் அந்தச் செல்வாக்கு எல்லாம் கரைந்து போயிற்று.

இப்போது மீண்டும் புனர்ஜென்மம் எடுக்க ராஜபக்ஷக்களின் அடுத்த தலைமுறை பகீரதப் பிரயத்தனம் பண்ணுகிறது. கட்சியை விட்டு விலகிப் போன பலரை மீண்டும் இணைக்கும் வேலைகள் மும்முரமாக - முழு மூச்சாக - நடக்கின்றன. ஏற்கனவே மொட்டுக் கட்சியின் ஸ்தாபகராக இருந்து சஜித் பக்கம் தாவிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மீண்டும் ராஜபக்ஷக்களுடன் சங்கமமாகிவிட்டார் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

தெற்கில் மட்டுமல்லாமல் வடக்கு, கிழக்கிலும் காலூன்ற மொட்டுக் கட்சி முயல்வதாகத் தெரிகிறது.

ஏற்கனவே யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கீதநாத் காசிலிங்கத்தை அமைப்பாளராக நியமித்த அக்கட்சி, இப்போது கிளிநொச்சி மாவட்டத்திற்கும் புதிய அமைப்பாளர்கள் ஒருவரை நியமிப்பதற்கு முடிவு செய்து இருக்கிறது எனத் தெரிகிறது.

தமிழ் ஊடகத்துறையில் பெரிதும் அறியப்பட்ட - கால் நூற்றாண்டு ஊடகப் பட்டறிவு கொண்ட - ஒரு பிரபல ஊடகவியலாளர் அந்தப் பொறுப்பை ஏற்கின்றார் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. பெரும்பாலும் அடுத்த வாரத்தில் நியமனக் கடிதம் அவருக்கு வழங்கப்பட இருக்கின்றது.

அரசியலில் ஒரு காலத்தில் ராஜபக்ஷக்கள் போட்டதுதான் சட்டம் என்ற ஒரு நிலைமை இருந்தது. யுத்தம் முடிந்த கையோடு நடைபெற்ற பொது தேர்தலில் யாழ் மாவட்டத்தில் தனித்து தமது வீணைச் சின்னத்தில் களமிறங்க ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா விரும்பினாராயினும், ஆட்சி அதிகாரத்தின் அழுத்தம் காரணமாக அவரும் அவரது கட்சியினரும் வெற்றிலைச் சின்னத்தின் பட்டியலில் போட்டியிட வேண்டியவர்களானார்கள்.

இப்போது உள்ளூராட்சி தேர்தல் வருகின்றது. வடக்கில் அவரது வீணை சின்னத்திலாவது மொட்டுவுக்கு இடம் கிடைக்காதா என்று ஏங்கும் நிலையில் ராஜபக்ஷக்களின் ஜுனியர்கள் இருக்கிறார்கள் என்று அறிய வருகின்றது.

அரசியலில் போக்கு மாற்றங்கள் தலைகீழாகின்றமை தவிர்க்க முடியாதவைதான்.

ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும் வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும்...!

+ + +

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் முக்கிய கூட்டம் இன்று திருகோணமலையில் நடக்கின்றது.

வரும் உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வது, எதிர்காலத்தில் தேசிய இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான விடயத்தில் கையாள வேண்டிய நடைமுறை, கட்சியின் ஒழுங்குக் கட்டுப்பாடுகளை மீறியவர்களுக்கு எதிரான நடவடிக்கை ஆகியவை தொடர்பில் முக்கிய முடிவுகள் இன்று எடுக்கப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று மதியத்துக்கு பின்னர் நிலைமை தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

---

## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த வாரம் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி, முன்னாள் கைதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் கட்சியினரின் ஆதரவுடன் கையொப்பம் பெறும் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அது வெற்றி பெற்றுள்ளமையை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

விசேடமாக தமிழ் மக்களுக்காகப் போராடி ஒரு அரசியல் தீர்வைப் பெறுவதற்கான தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் மௌனிக்கப்பட்டபோது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பயங்கரவாத தடைச் சட்டம் அரசாங்கத்தினாலேயே ஒரு சட்டவிரோதமான, கொடூரமான, சட்டத்தின் ஆட்சியை மீறுகின்ற ஒரு ஆவணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்தக் கருத்து ஸ்ரீலங்கா அரசினால் சர்வதேச மட்டத்தில் விசேடமாக ஐ.நா. பேரவையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதாவது, பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒரு சட்டத்தின் ஆட்சி முறைக்கும், ஜனநாயகத்துக்கும் விரோதமான விடயமாகவும் கருதப்படுகின்றது.

அது முற்றிலும் நீக்கப்பட்டு ஒரு புதிய சட்டம் சர்வதேச சட்டத்துக்கு அமைவாக கொண்டுவரப்பட வேண்டும் என்றும், அல்லது இருக்கும் சட்டத்தை முற்றுமுழுதாக மாற்றியமைத்து சர்வதேச நியமங்களுக்கு அமைவாக மாற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்ற கோஷம் மேலோங்கி நிற்கின்றது.

இது கையொப்பம் பெறும் போராட்டம் ஊடாகவும், வேறு வழிகளிலும் வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை என்று கூறுகின் றார். அவர் அதனைச் சொல்வதற்கு அரசியல் பின்னணிதான் காரணம். ஏனெனில் இதற்கு முதல் அவருடைய தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் காலத்தில் வடக்கு, கிழக்குக்கு வந்து சிறையில் உள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று பேசியிருந்தார்.

ஆனால், தற்போது நீதி அமைச்சர் அந்த விடயத்திலிருந்து பின்வாங்குகின்றார். இதுவொரு அரசியல் காரணமாகத்தான் இருக்கவேண்டும்.

அந்தவகையில் தேசிய மக்கள் சக்தியின் ஜே.வி.பி. அமைப்பினரின் உறுப்பினர்களும் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். அவர்களும் அரசியல் கைதிகளாகவே இருந்தனர்.

இப்போதும் கூட அவர்கள் ஆட்சியில் இருந்திருக்காவிட்டால் வேறு ஒரு தரப்பு ஆட்சியில் இருந்திருந்தால், அவர்களது உறுப்பினர்கள் கைது செய்யப்படும் போது, அது அரசியல் நோக்கத்துக்கான கைதாகவே இருந்திருக்கும்.

ஆனால், அதே நிலையில், வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடி கைது செய்யப்பட்டவர்களை அரசியல் கைதியாக கணிக்க முடியாது என்று தேசிய மக்கள் சக்தியின் நீதி அமைச்சர் அறிவிப்பதற்கு ஒரே காரணம் இனவாதம் தான். இது கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

இந்த நீதி அமைச்சர் கடந்த காலங்களில் இருந்த பிற்போக்குவாத நீதி அமைச்சர்களின் நிலைப்பாட்டுடன் இணைந்து போவது ஒரு பலத்தை ஏமாற்றத்தைத் தரும் விடயமாகும்.

இது தேர்தல் காலத்தில் வடக்கு, கிழக்கில் மாற்றம் என்று வந்த தேசிய மக்கள் சக்தியின் நாடகம் என்பதை நிரூபிக்கும் விடயமாகவே காணப்படுகின்றது." - என்றார்.

---

## ஈழத் தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைமை கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் அமோர், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் கார்மன் மொறேனோ உள்ளிட்ட குழுவினருக்கும் சிவஞானம் சிறீதரன் எம்.பிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இதன்போது, கடந்த ஜனாதிபதித் தேர்தல் குறித்த கருத்துப் பகிர்வுகள் இடம்பெற்ற சமநேரத்தில், ஈழத்தமிழர்களின் அரசியல் உரித்துக் கோரும் பயணத்தின் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பிலும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் குறித்தும் கோரப்பட்ட போது, உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு - கிழக்குக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு என்பதுதான் சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசும் சேர்ந்து ஒஸ்லோவில் இணங்கிக் கொண்ட இறுதி விடயம் என்ற அடிப்படையில் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கும் சமஷ்டி முறைமைக்கும் இடையிலான நடைமுறை வேறுபாடுகள், 13 ஆவது திருத்தச் சட்டத்தை புறந்தள்ளி சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டியதன் நியாயப்பாடுகள், கனடா, சுவிஸ், பெல்ஜியம் போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் சமஷ்டி முறைமையையும், இந்திய மாநில சுயாட்சி முறைமையையும் அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் சமஷ்டியை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ள யதார்த்தப் புறநிலைகள் குறித்து சிறீதரன் எம்.பி., ஐரோப்பிய ஒன்றியத்தினரிடம் வலியுறுத்தினார்.

இதன்போது தமது குழுவினால் தயாரிக்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு அறிக்கையின் பிரதி ஒன்றை, தமிழர் பிரதிநிதிகள் சார்பில் சிறீதரன் எம்.பியிடம் குழுவின் தலைமை கண்காணிப்பாளர் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நாடு திரும்பினார் ஜனாதிபதி! அநுர

நாடு திரும்பினார் ஜனாதிபதி! ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனாவுக்கான தனது நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து நாடு திரும்பினார்.

சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் இறுதி நாளான நேற்று காலை ஜனாதிபதிக்கும் சிச்சுவான் மாகாண சீன கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் வாங் சியாஹுயிக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது.

அதன் பின்னர், சீனாவின் சிச்சுவான், வெங்டூவில் உள்ள டெங்பேங் மின்சாரக் கூட்டுத்தாபனத்திற்கு ஜனாதிபதி விஜயம் செய்தார்.







## கோட்டவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

3 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

கதிர்காமம் பகுதியிலுள்ள காணி ஒன்றுக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டமை தொடர்பான குற்றச்சாட்டு குறித்து வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் நேற்று முற்பகல் 10.45 அளவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையானார்.

சுமார் 3 மணிநேரம் வாக்குமூலம் வழங்கியதன் பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறினார்.

இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரின் தலைமை பாதுகாப்பு அதிகாரி மேஜர் நெவில் வன்னியாராச்சி ஆகியோரிடமிருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலம் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணம் வந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

இரு நாள் பயணமாக யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள அவர் நேற்று மாலை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வொன்றில் அவர் கலந்துகொள்வார்.

இதேநேரம் இன்று மதியம் தெல்லிப்பழையில் நடைபெறும் தேசிய பொங்கல் விழாவிலும் அவர் பங்கேற்றுவிட்டு கொழும்பு திரும்புவார்.



# அறுகம்பை சுற்றுலா தலம் மீது பயங்கரவாத தாக்குதல் திட்டம்

## பயங்கரவாத புலனாய்வுப்பிரிவு நீதிமன்றத்தில் தெரிவிப்பு

இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் பலர் தங்கியிருந்த அறுகம்பை சுற்றுலாத் தலத்தை இலக்கு வைத்து, சிறைச் சாலைக்குள் இருந்து பாரிய பயங்கரவாதத் தாக்குதலை நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டிருந்ததாக பயங்கரவாத புலனாய்வுப்பிரிவு நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

அது தொடர்பிலான வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் தெரிவிக்கப் பட்டது.

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப் பட்டு பல ஆண்டுகள் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களைப் பயன்படுத்தி இந்த தாக்குதலை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயங்கரவாதிகள் மற்றும் தீவிரவாதிகளுடன் இணைந்து அறுகம்மை சுற்றுலாத் தலத் தில் பயங்கரவாதத் தாக்குதலை நடத்த திட்டமிட்டதாக கூறி 7 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினால் 90 நாள்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட அவர்களில் மூவர் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் புலனாய்வு அதிகாரிகளால் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணை அறிக்கையை சமர்ப்பித்த பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு, சந்தேகநபர்க ளிடம் மேலதிக விசாரணைகள் நடத்தப்படுகின்றன என தெரிவித்துள்ளது.

# கடத்தல்காரரிடம் இருந்து அதிகளவான பணம் மீட்பு!




சமீபத்திய வரலாற்றில் போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரிடம் இருந்து அதிகளவான பணம் நேற்று முன்தி னம் மீட்கப்பட்டதாகப் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், குறித்த நபரிடம் இருந்து 283.3 மில்லியன் ரூபா பணம் மீட்கப்பட்டதாகப் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நிதி நம்பிகை வரவில்லை...!

நாட்டில் ஓர் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட முன்னர், தேசிய ரீதியில் துறைகள் மற்றும் அமைச்சுகள் ரீதியாக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் பற்றிய விவரங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது வழமை.

இப்போது இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க இருக்கும் புதிய அரசாங்கம் அதற்கு முன்னோட்டமாக நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தை முன் வைத்து விட்டது. ஒவ்வொருஅமைச்சுக்கும், துறைக்கும் ஒதுக்கப்பட்ட மொத்த தொகை எவ்வளவு என்பது இப்போது வெளியாகி உள்ளது. இதனைப் பார்க்கும் போது அரசின் உத்தேச வரவு - செலவுத் திட்டம் எவ்வாறு அமையும் என்பதை ஓரளவு ஊகிக்க முடியும்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை பார்க்கும்போது, தற்போதைய அரசாங்கம் தேர்தலுக்கு முன்பு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான அடித்தளத்தை அமைக்கத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை எனப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞானம் மற்றும் புள்ளிவிவர ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு வெவ்வேறான வாக்குறுதிகளை இந்த அரசுத் தரப்பு வழங்கியது. அது மாத்திரமன்றி தேர்தல் விஞ்ஞாபனத்திலும், தேர்தலில் வென்ற பின்னர் அரசின் கொள்கை விளக்கவுரையிலும் வெவ்வேறான விடயங்கள் உள்ளடக்கப்பட்டன.

இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான அடிப்படை அடித்தளத்தை இந்த வரவு - செலவுத் திட்டத்தில் இட வேண்டிய கட்டாயம் அரசுக்கு இருந்தது. எனினும், அவ்வாறான அடித்தளத்தை தயாரிப்பதற்கான தயார் நிலை ஒதுக்கீட்டு சட்டமூலத்தை பார்க்கும் போது எங்களுக்குத் தெரியவில்லை என்று பேராசிரியர் வசந்த அத்துகோரள மேலும் தெரிவித்திருக்கின்றார்.

பொருளாதாரப் பெருவீழ்ச்சியில் துவண்டு கிடந்த நாட்டை மீட்டெடுக்க - பிணையெடுக்க - முன் வந்த சர்வதேச நாணய நிதியத்தின் வழிக்காட்டல்களுக்கு அமைவாகவே இந்த வரவு - செலவுத் திட்டத்தை திட்டமிட வேண்டிய நிலை உள்ளது என்பது உண்மைதான் என அவர் சுட்டுகின்றார்.

இவ்விவகாரத்தில் சர்வதேச நாணய நிதியமும் ஒரு சில வழிகாட்டல்களை வழங்கியுள்ளதுதான். ஆயினும், அந்த வழிக்காட்டல்களைத் தாண்டி, அவற்றை விடவும் முன்னோக்கிச் செல்ல எங்களால் முடியும். பின்னோக்கி பயணிக்க முடியாது. இந்தப் புரிதலுடன் பொருளாதார வல்லுநர்கள் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும் என்று அவர் தெளிவுபடுத்துகின்றார்.

“கடந்த கால நெருக்கடி நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் பொருளாதாரம் ஒரு நல்ல அடித்தளத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த நிலையான பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும். நாங்கள் எதிர்பார்ப்பது அதற்கான வளர்ச்சிக்கான வரவு - செலவுத் திட்டத்தைத்தான். அரசாங்கம் அதை நோக்கிச் செயல்பட வேண்டும் என்பது எனது கருத்து.” - என்று குறிப்பிடும் அவர், எனினும், அது அரசாங்கத்தின் தரப்பில் நடக்குமா என்பது எனக்குத்தெரியவில்லைஎன்றும்கூறுகின்றார்.

அரசின் வரவு - செலவுத் திட்டத்துக்கு முந்திய நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் அந்த நம்பிக்கையைத் தரவில்லை என்பதுதான் தமிழ் மக்களின் கருத்தாகவும் இருக்கின்றது.



# ஊடக அமைச்சரை சந்தித்தனர் கொழும்பு ஊடகவியலாளர்கள்

கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில், வெகுஜன ஊடக மற்றும் சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸவுடன் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சின் வளாகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

பிராந்திய ஊடகவியலாளர்களின் திறன்களை வளர்ப்பதற்காக குறுகிய கால மற்றும் நீண்டகால பயிற்சி வகுப்புகளை நிறுவுமாறு அமைச்சர் ஊடகவியலாளர்களிடம் குறிப்பிட்டார்.



இதன்போது, கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கம் பதினொரு அம்சங்கள் அடங்கிய மகஜர் ஒன்றையும் அமைச்சரிடம் கையளித்தது. அனைத்து பிராந்திய ஊடகவியலாளர்களும் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் குறித்து கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கம் அமைச்சரிடம் தெரிவித்தது.

இலங்கையில் உள்ள அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் , ஊடகவியலாளர் காப்பீட்டுத் திட்டம் மற்றும் தகவல் துறையால் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் கடன் வசதிகள் குறித்தும் அமைச்சரின் கவனம் செலுத்தப்பட்டது.

அந்தக் காப்பீட்டு முறை மற்றும் கடன் வசதி மூலம் ஊடகவியலாளர்கள் மிகவும் மதிப்புமிக்க ஏற்பாடுகளைப் பெற்றனர் என்றும், அது இலங்கையில் உள்ள அனைத்து ஊடகவியலாளர்களின் தொழில் வாழ்க்கையிலும் மிக முக்கியமான காரணியாகும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த விடயங்கள் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன், இந்த இரண்டு விடயங்களின் அடிப்படையில் எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயுமாறு வெகுஜன ஊடக அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

ஊடக அடையாள அட்டை தொடர்பாக எதிர்காலத்தில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் நிசாந்த பிரியதர்ஷன மற்றும் நிர்வாக உறுப்பினர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.










# இலங்கைக்கான இந்திய தூதுவர் யாழ்.பருத்தித்துறைக்கு விஜயம்

(எஸ்.ரகுதீஸ்)

இந்திய அரசினதும் இந்திய மக்களின் நிதி பங்களிப்பில் வடமராட்சி வடக்கு சமாசத்திற்கு உட்பட்ட தொழிலாளர்களுக்கு வலைகள் வழங்கும் வைபவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பருத்தித்துறை பிரதேச செயலாளர் எஸ். சத்தியசீலன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 40 பயனாளிகளிற்கு வலைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், இலங்கைக்கான இந்திய தூதுவர் எச்.ஈ.சந்தோஷ் ஜா, யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணை தூதுவர் எஸ். ஸ்ரீசாய் முரளி மற்றும் கடற் தொழிலாளர் சங்கத்தினர் கலந்து கொண்டிருந்தனர்.










# நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு மனுஷ நாணயக்காரவுக்கு உத்தரவு



முன்னாள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, தாம் கைது செய்யப்படுவதை தடுக்கும் வகையில் தாக்கல் செய்துள்ள முன்பிணை கோரல் மனு தொடர்பான விடயங்களை முன்வைப்பதற்காக எதிர்வரும் 20 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவித்தல் அனுப்புமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பொறுப்பதிகாரி மற்றும் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அறிவித்தல் அனுப்புவதற்கு கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் உள்ளிட்ட சட்டத்தரணிகள் ஊடாக தாக்கல் செய்த பிணை கோரிக்கை மனுவை பரிசீலித்த தன் பின்னர் நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இலங்கைக்கும் தென் கொரியாவிற்கும் இடையிலான விவசாய மற்றும் மீன்பிடித் தொழிலாளர் வேலைத்திட்டத் திற்கமைய மனுதாரர் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் ஈ8 விசா பிரச்சினை தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் தமது கட்சிக்காரரான முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவை கைது செய்வதற்கு தயாராகி வருவதாக சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், மனுதாரர் தனக்குக் கிடைத்த அதிகாரங்களின்படி மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் என்றும் தனிப்பட்ட ரீதியில் மேற்கொண்ட செயல் அல்ல எனவும் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

ஒரு அமைச்சராக இரண்டு அரசாங்கங்களுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திட்டார். எனவே அவர் மீது குற்றவியல் வழக்கு தொடர முடியாது எனவும், மனுதாரருக்கு முன்பிணை வழங்குமாறும் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைத்துள்ளனர்.

இந்த விடயங்களை பரிசீலித்த நீதவான், குறித்த வழக்கை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளார்.

# பெப்ரவரி 21, 22 ஆம் திகதிகளில் வியட்நாமில் உலகத் தமிழர் மாநாடு




(எஸ்.நிதர்ஷன்)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் வியட்நாமில் உலகத் தமிழர் மாநாடு நடைபெறவுள்ளது என்று பன்னாட்டு தமிழர் நடுவத்தின் தலைவர் திருத்தணிகாசலம் தெரிவித்தார்.

உலகத் தமிழர் மாநாடு தொடர்பாக இலங்கை வாழ் தமிழர்களைத் தெளிவூட்டும் ஊடகச் சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

# அரிசி பிரச்சினைக்கு இரு வாரங்களில் தீர்வு

## பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன உறுதி



"நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரிசி தட்டுப்பாடு பிரச்சினைக்கு இரண்டு வாரங்களில் தீர்வு காண்போம். அதன் பின்னர் நாட்டில் அரிசி பிரச்சினை ஏற்படுவதற்கு இடமளிக்கப் போவதில்லை."

– இவ்வாறு விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

சந்தையில் ஏற்பட்டுள்ள அரிசி பிரச்சினைக்கு தீர்வுகாண எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பி கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"நாட்டில் தற்போது தலைதூக்கி இருக்கும் அரிசி பிரச்சினை இன்னும் இரண்டு வாரங்களே இருக்கும். இரண்டு வாரங்களில் இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். தற்போது நாட்டின் ஒவ்வொரு பகுதிகளிலும் விவசாயிகள் நெல் அறுவடை செய்ய ஆரம்பித்துள்ளனர்.

அரசாங்கம் என்றவகையில் நாங்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வோம். சிறிய, நடுத்தர ஆலை உரிமையாளர்களும் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்ய தேவையான ஏற்பாடுகளை செய்திருக்கிறன. அதனால் அரிசி பிரச்சினையில் இருந்து நாங்கள் வெளியில் வருவோம்.

இந்த நாட்டில் அரிசி மாபியாக்கள் நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி ஆகிய மூன்று மாதங்களிலேயே செயற்படுவார்கள். இந்த காலப்பகுதியிலேயே நாட்டுக்கு அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த காலப்பகுதியிலேயே நாட்டில் அரிசி விலை அதிகரிக்கப்படுகிறது. அதேபோன்று இந்த காலப்பகுதியலேயே நாட்டில் அரிசி காணாமல் போகிறது. அதனால் எதிர்காலத்தில் இந்த காலப்பகுதில் இவ்வாறான பிரச்சினை இடம்பெறுவதற்கு இடமளிக்கப்போவதில்லை.

அதனல் அரசாங்கம் என்றவகையில் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யும் ஒரு கதிர் நெல்லைக்கூட விற்னை செய்யப்போவதில்லை. அந்த நெல்லை மீண்டும் அரிசியக்கி பொது மக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்வோம். தற்போது நாட்டில் ஏற்ட்டிருக்கும் அரிசி பிரச்சினை நாங்கள் ஏற்படுத்தியது அல்ல. நாங்கள் அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் இருந்தது.

என்றாலும் அரசாங்கம் என்வகையில் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். என்றாலும் இந்த பிரச்சினை இந்த வருட இறுதியில் மீணடும் சந்திக்க ஏற்பட்டால் மாத்திரம் எங்களது பிரச்சினையாக மாறும், அந்த பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிவரும். அதனால் அரிசி பிரச்சினை நாட்டில் மீண்டும் ஏற்படுவதற்கு நாங்கள் இடமளிக்கப்போவதில்லை."– என்றார்.

# வவுனியா பிரதேச செயலகத்தில் பொங்கல் விழா

**(கி.வசந்தன்)**

வவுனியா பிரதேச செயலகத்தில் பொங்கல் விழா பிரதேச செயலக வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள ஒன்பது கிளைகளுக்கிடையில் பொங்கல் விழாவை முன்னிட்டு போட்டி நிகழ்வு ஒன்றும் நடைபெற்றிருந்ததுடன், தமிழர் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் முகமான நடனங்களும் இடம்பெற்றிருந்தன.

மேலும் ஒவ்வொரு கிளையினாராலும் தமிழர் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு விடயங்கள் காட்சிப் படுத்திருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் சரத் சந்திர பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

தமிழ்மணி அகளங்கன் மற்றும் அதிகாரிகள், அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



# ஈழத்து நாடகத் துறையின் பிதாமகர் குழந்தை சண்முகலிங்கம் பிரிந்தார்

## அவரின் "மண் சுமந்த மேனியர்" ஓர் அழியா நினைவாகக் காலத்தை வென்று நிற்கும்

ஈழத்து நாடகத் துறையின் பிதாமகர் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் நேற்று தமது 94 ஆவது வயதில் காலமானார்.

1931-11-15 இல் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பிறந்த மயில் வாகனம் - சண்முகலிங்கம் குழந்தை ம.சண்முகலிங்கம் என எல்லோராலும் அறியப்படுகிறார்.

1950 ஆம் ஆண்டு தமது நாடக பயணத்தை ஆரம்பித்த ம.சண்முகலிங்கம் 1951 ஆம் ஆண்டு திருநெல்வேலி இந்துவாலிபசங்கநாடகமொன்றில் கிழவன் பாத்திரம் ஏற்று நடித்தார். 1957 ஆம் ஆண்டு "அருமை நண்பன்" என்னும் நாடகத்தை எழுதி தயாரித்தமையோடு 1958 ஆம் ஆண்டு கலையரசு சொர்ணலிங்கம் தயாரித்த நாடகத்தில் அருச்சுனன் பாத்திரம் ஏற்று நடித்தார். 1960 ஆம் ஆண்டு திருக்குறள் தந்த திருவள்ளுவரின் வாழ்வைச் சித்தரிக்கும் "வையத்துள் தெய்வம்" என்னும் எழுத்துருவை எழுதியமையோடு "சந்தி", "தாலியைக்கட்டு" போன்ற நாடகங்களிலும் பங்குகொண்டார்.

ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றிய இவர் 1976ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நாடக டிப்ளோமாப் பயிற்சியில் பங்கு கொண்டமை நாடகத்துறையில் புதிய பயணததை மேற்கொள்ளக. காரணமாக அமைந்தது.

நாடகக் கலைஞர் அ.தாசீசியஸ் உடன் இணைந்து நாடக அரங்கக் கல்லூரியினை உருவாக்கினார். இதன் முதல் படைப்பாக "கூடிவிளையாடு பாப்பா" - சிறுவர் நாடகத்தினை எழுதி அரங்கேற்றியமையோடு அ. தாசீசியஸ் உடன் இணைந்து நாடக அரங்கக் கல்லூரியின் ஊடாக நாடக ஆர்வலர்களுக்கு களப்பயிற்சியினை நடாத்தினார். குறிப்பாக பல பாடசாலைகளிலும் இவர் நாடகப் பயிற்சியை வழங்கியுள்ளார்.

1980 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உறவுகள், நாளைமறுதினம், மாதொருபாகன், புழுவாய் மரமாகி, தாயுமாய் நாயுமானார், திக்விஜயம், நரகத்தில் இடர்ப்படோம், சத்திய சோதனை, தியாகத்திருமணம் , பஞ்ச வர்ண நரியார் போன்ற பாடசாலை நாடங்களை எழுதித் தயாரித்தார். 1985 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலாசார குழுவுக்காக "மண்சுமந்த மேனியர்" எழுதித் தயாரிக்கப்பட்டது. மண்சுமந்தமேனியர் என்னும் நாடகத்தினூடாக ஈழத்தமிழரின் போராட்டம் பற்றி விவரித்ததோடு, அன்னை இட்ட தீ (1991) நாடகத்தின் ஊடாக போராட்டத்தின் காரணமாக மக்கள் மனங்களில் ஏற்பட்ட வடுக்கள் தொடர்பாகப் பேசியிருந்தார்.

எந்தையும் தாயும் முதுமையில் பெரியோர்களை பேணுதல் தொடர்பாகப் பேசுகிறது. யார்க்கெடுத்துரைப்பேன் என்ற இவரின் நாடகம் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்த அகதிகளின் அவலநிலையை பேசுகிறது.



இந்திய அமைதிப்படையினால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் நிலையை வேள்வித் தீ நாடகம் சித்திரிக்கிறது.

ஆர்கொலோ சதுரர், அளப்பெருங் கருணை போன்ற நாட்டிய நாடகங்கள் என்பவற்றுடன் தாகூரின் துறவி, கிரேக்க இடிபஸ் மன்னன், நோவே ஒரு பாவை வீடு என்பனவற்றை மொழிபெயர்த்து மேடையேற்றினார்.

கலைப்பட்டதாரியான சண்முகலிங்கம் ஈழத்தின் சொர்ணலிங்கம், தமிழகத்து பம்மல் சம்பந்தமுதலியார் ஆகியோரை குருவாகக்கொண்டு தனது இயல்பான நடிப்பினாலும் அரங்க அமைப்பு முறைகளினாலும் நவீன மயப்பட்ட அரங்கொன்றை ஈழத்திற்குத் தந்துள்ளார். அவரது உலக நாடக அரங்கியல் மாற்றங்களோடு தன்னை இணைத்துக்கொண்டு புடம் போட்டு ஈழத்தமிழரின் அரசியலை, வாழ்க்கை ஆகியவற்றை நாடகத்தின் பொருளாக்கி ஈழத்தின் தமிழ் நாடகப் போக்கயே மாற்றியமைத்தவர்.

நூறுக்கும் மேற்பட்ட சமூகவிடுதலை, அரசியல் விடுதலை, பண்பாட்டு விடுதலை சார்ந்த நாடகங்களை ம.சண்முகலிங்கம் எழுதியுள்ளார்.

இவற்றில் பல நூலுருவிலும் வந்திருக்கின்றன. நாடக ஆசிரியர்களான சோபாக்கிளிஸ், இப்சன், அன்ரன்-செக்கோவ், பேட்டல்-பிரக்சட், தாகூர் ஆகியோரின் நாடகங்களில் சிலவற்றையும் சில ஜப்பானிய நாடகங்களையும் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.

1970களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நாடக அரங்கக் கல்லூரி ஒன்றினை நிறுவி நாடகத்தை ஒரு பயிற்சி நெறியாக தமிழ் கலைஞர்கள் மத்தியில் அறிமுகம் செய்தமையானது யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, இலங்கையிலேயே காத்திரமான நாடகத்துறை ஒன்று உருவாக காரணமாகியது.

1980களுக்குப் பின்னர் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பிரச்சுனைகளை தனது நாடகங்கள் மூலமாக வெளிப்படுத்திய இவர் இராணுவ அடக்குமுறை, பெண்களுக்கெதிரான அடக்குமுறை, மாணவர்களை அடக்கிய கல்வி அடக்குமுறை, சாதிய அடக்குமுறை, சமூகத்தின் போலித்தனங்கள் என்பவற்றையெல்லாம் தனது நாடகங்கள் மூலமாக வெளிப்படுத்தினார். குறிப்பாக இவரின் "மண் சுமந்த மேனியர்" நாடகம் யாழ்ப்பாணத்தின் பட்டி தொட்டியெல்லாம் மேடையேற்றப்பட்டு மக்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தது.

ஈழத்திலே நாடகத் தலைமுறையொன்றின் தாயென கார்த்திக்கேசு சிவத்தம்பி அவர்களால் வர்ணிக்கப்படும் மயில்வாகனம் சண்முகலிங்கம் அவர்களின் பெரும்பாலான நாடக எழுத்துருக்கள் சமூக, அரசியல், போர்க்கால உளவியல் நாடகங்களாக உள்ளதோடு மக்களின் சமகாலப்(1980-2009) பிரச்சினைகளை பேசுவதை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

ஈழத்துத் தமிழ் நாடக அரங்க வரலாற்றில் முதன் முதலில் உளவியல் நாடகங்களை எழுதிய பெருமை இவரையே சாரும். இவரின் அனைத்து எழுத்துருக்களும் சிறப்பானவையாக விளங்குவதோடு அன்னையிட்ட தீ, எந்தையும் தாயும், மண்சுமந்த மேனியர் என்பன ஈழத்துத் தமிழர்களின், எண்பதுகளின் வரலாற்றுக்கான முக்கியமான கலைப்பதிவிகளாகும். மண்சுமந்த மேனியர்-(1985) முதல் எந்தையும் தாயும் வரை(1992) உள்ள நாடகங்கள் "யாழ்ப்பாணத்தின் போர்க்கால வரலாற்றுக்கான அரங்கியற் பதிகைகளாகும்". பலர் எடுத்துப்பேசத் தயங்கிய பல விடயங்களை குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் ஒளிவு மறைவின்றி எந்தையும் தாயும், அன்னையிட்ட தீ, மாதொருபாகம், வேள்வித்தீ, மண்சுமந்த மேனியர், நீ செய்த நாடகமே, நரகொடு சுவர்க்கம் போன்ற பல நாடகங்கள் மூலம் அலசினார் எனலாம்.

ம.சண்முகலிங்கம் அவர்கள் நாடகத் துறையினுள் நுழைந்த காலத்திலிருந்து(1950) இன்று வரைக்குமான அவரது பங்களிப்பை அறிவோமாகயிருந்தால் நடிகராக, நாடகாசிரியராக, நெறியாளராக, தயாரிப்பாளராக, ஆய்வாளராக, நாடகப் போதானாசிரியராக, நாடகக் களப்பயிற்சியாளராக, விமர்சகராக, உலக நாடக வரலாற்றாசிரியராக, மொழிபெயர்ப்பாளராக, நாடக அரங்கக் கல்லூரி நிறுவுனராக, கல்வி சார் அரங்கினை பிரக்ஞை பூர்வமாக உருவாக்கியவர் என பல்பரிமாணமுடையவராகபல்துறைஆற்றல்கொண்டவராக விளங்குகின்றார்.

1976ம் ஆண்டில் வெளியான பொன்மணி இலங்கைத் திரைப்படத்தில் இவர் நடித்துள்ளார்.

இவரின் நாடகத்துறை அதீத ஆற்றல் காரணமாக இவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வருகை தரு விரிவுரையாளராக நியமித்தது. 2001 ஆம் ஆண்டு நாடகத்துறைக்கு இவர் ஆற்றி வரும் பணிக்காக கிழக்குப் பல்கலைக் கழகம் கலாநிதி (முனைவர்) பட்டம் வழங்கியிருந்தது.

குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் ஈழத்துத் தமிழ் நாடக உலகில் நூற்றி ஐம்பதிற்கு(150) மேற்பட்ட நாடக எழுத்துருக்களை எழுதியுள்ளார்.



# மியான்மார் அகதிகளை நாடுகடத்துவதைக் கண்டித்து மட்டு நகர் பள்ளிவாசலுக்கு முன் நேற்று ஆர்ப்பாட்டம்

(கனகராசா சரவணன்)

மியான்மார் ரோஹிங்கிய அகதிகளை நாடுகடத்தும் தீர்மானத்தை அரசு மீள்பரீசீலனை செய்ய வேண்டும் எனக் கோரி மட்டக்களப்பு நகர் ஜாமிஉஸ்ஸலாம் ஜும்ஆ மஸ்ஜித் பள்ளிவாசல் முன்னால் நேற்று வெள்ளிக்கிழமை பொது மக்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




ரோஹிங்கிய அகதிகளை நாடுகடத்தும் இந்த அரசின் தீர்மானத்தை எதிர்த்து பள்ளிவாசலுக்கு முன்னால் ஒன்று கூடுமாறு மட்டக்களப்பு விவசாய சம்மேளனம் அழைப்பு விடுத்ததையடுத்து வெள்ளிக்கிழமை பகல் 1 மணிக்கு தொழுகையின் பின்னர் அங்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். நழீம், விவசாய சம்மேளன தலைவர் சுந்தரேசன் உட்பட பொதுமக்கள் ஒன்று திரண்டனர்.

இதனை தொடர்ந்து 'ரோஹிங்கிய அகதிகளை துன்புறுத்தும் மியான் மாருக்கு திருப்பி அனுப்பாதே!', 'இலங்கை அரசே! சர்வதேச சட்டங்களை அமுல்படுத்து!', 'யு.என்.எச்.சி.ஆர். அப்பாவி மியான்மார் அகதிகளைப் பெறுப்பெடுத்துப் புகலிடம் கொடுக்கும் நாடுகளுக்கு பராப்படுத்து!', 'மியான் மாரில் இருந்து மேலும் ஒரு லட்சம் அகதிகள் படையெடுப்பார்கள் என்ற பீதியைக் கிளப்பாதே!' போன்ற பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சுமார் ஒரு மணித்தியாலம் அவர்கள் ஈடுபட்டனர். பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துவிட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.






# மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிக் கடலில் கரை ஒதுங்கிய பாரிய தண்ணீர்த் தாங்கி

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிக் கடலில் மிதந்து வந்த பாரிய தண்ணீர்த் தாங்கி ஒன்றை மீனவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலையில் அதனைக் கரைக்கு இழுத்துக் கொண்டு வந்துள்ளனர். இது தொடர்பாக கடற்படையினரும் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த சில வாரங்களாக கிழக்கு மாகாண கடற்கரை பகுதிகளில் மர்மான பொருட்கள் மற்றும் ஆளில்லாத படகுகள், டொல்பீன்கள் போன்றவை கரை ஒதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# ஆட்சிக்கு வருவதற்கு முன் இருந்த அரசியல் கைதிகள் ஆட்சிக்கு வந்ததுமே காணாமல் போனமை எங்ஙனம்?

## அவர்களைக் காணாமலாக்கியவர் யார் என அருட்தந்தை சக்திவேல் கேள்வி

(கனகராசா சரவணன்)

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அரசியல் கைதிகள் உள்ளனர், அவர்களை விடுதலை செய்வோம் என்று கூறி பதவிக்கு வந்தவர்கள் பதவியேற்றதும் அரசியல் கைதிகள் என்று எவரும் சிறையில் இல்லை எனக் கூறுவார்களாயின் அவர்களைக் காணாமல் ஆக்கியவர்கள் யார்? இந்த விதண்டாவாதப் பேச்சு அவர்களின் அரசியல் அநாகரித்தை அம்பலப்படுத்தி உள்ளது. இப்படி வாக்களித்த தமிழர்களை ஏமாற்றி, தமிழர்களின் அரசியலை அவமானப்படுத்தி உள்ளமையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

– இவ்வாறு சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்தார்.

அரசியல் கைதிகள் எவரும் இல்லை என நீதி அமைச்சர் தெரிவித்ததைமையை கண்டித்து அருட்தந்தை மா.சக்திவேல் நேற்றுய் வெள்ளிக்கிழமை ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் கூறப்பட்டவை வருமாறு:-

சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை, அரசியல் தீர்மானம் எடுத்து நிபந்தனை இன்றி விடுதலை செய்ய வேண்டும் என்பதும் பயங்கரவாத தடை சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதும் தமிழர்களின் மிக நீண்ட கால அரசியல் கோரிக்கைகளாகும்.

தமிழர் தாயக மண்ணான வவுனியாவில் ஜனாதிபதி தேர்தல் பிரச்சார மேடையில் நின்று தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நாம் பதவிக்கு வந்தால் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம், இதற்கு தெற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என உறுதியளித்து சென்றதன் ஈரம் காயும் முன்னே அவரது அரசாங்கத்தின் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அரசியல் கைதிகள் என்று சிறைகளில் எவரும் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். இது அவர்களின் அரசியல் அநாகரித்தை அம்பலப்படுத்தி உள்ளதோடு, வாக்களித்த தமிழர்களையும் ஏமாற்றி தமிழர்களின் அரசியலை அவமானப்படுத்தி உள்ளமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அரசியல் கைதிகள் உள்ளனர். அவர்களை விடுதலை செய்வோம் என்று கூறி பதவிக்கு வந்ததும் அரசியல் கைதிகள் என்று எவரும் சிறையில் இல்லை எனக்கூறுவார்களாயின் அவர்களைக் காணாமல் ஆக்கியவர்கள் யார் ?

இதற்கு முன்னரும் மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்



வின் சில்வா பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பவர்கள் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றே குறிப்பிட்டிருந்தார். அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று குறிப்பிடப்படவில்லை. இது அரசாங்கத்திற்குள் பிளவையேவெளிபடுத்துகின்றது. தமிழர்களின் அரசியல் சார்ந்த விடயங்களில் எந்த ஒரு துளி நகர்வையேனும் தேசிய மக்கள் சக்தி மேற்கொள்ளப் போவதில்லை என்பதும் இதன்மூலம் தெளிவாகின்றது.

கடந்த கால ஆட்சியாளர்களைப் போல் பேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் தமிழர்களின் அரசியலை பயங்கரவாதத்திற்குள் முடக்கி, பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றுக் கொடுத்து, சிங்கள பௌத்த பேரினவாதத்தை மகிழ்விக்கவே முன் நிற்கின்றது என்பது தெளிவாகின்றது.

தற்போதுசிறைகளில்10பேரும்குறைவான அரசியல் கைதிகளே உள்ளனர். இவர்களில் மரண தண்டனை கைதிகளும் உள்ளனர். இவர்களைப் பயங்கரவாதத் தடை சட்டத்திற்கு வெளியே எடுத்து விடுதலை செய்யக்கூடாது என்பதில் பேரினவாத ஆட்சியாளர்கள் உறுதியாக உள்ளமையோடு, தண்டனை காலத்தையும் கடந்து சிறையில் வாடும் அவர்களின் வாழ்வை சிறைக்குள்ளேயே கொலை செய்வதற்கும் முயற்சிப்பதாகவே தோன்றுகின்றது.

கடந்த காலங்களில் அரசியல் கைதிகள் தங்கள் விடுதலையை வலியுறுத்தி சிறைக்குள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தனர். சாகும் வரையான உண்ணாவிரதஒ போராட்டத்தையும் தொடர்ந்தனர். இவர்களின் விடுதலைக்காக தமிழர் தாயகத்திலும் கொழும்பிலும் சிங்கள மக்களின் ஆதரவோடு பல்வேறு வடிவங்களில் விடுதலைக்கான முயற்சிகள் மேற்கண்ட போதும் அவை இன்று வரைப் பலன் அளிக்கவில்லை.

நல்லாட்சி எனக்கூறப்படும் மைத்திரி – ரணில் ஆட்சிக்காலத்தில் அமைச்சுப் பதவிகளில் இருந்த தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சியில் அமர்ந்து அரச சுகபோகங்களை அனுபவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதிலும் ஈடுபடவில்லை என்பதை வேதனையோடு மீண்டும் வெளிப்படுத்துவதோடு, அரசியல் கைதிகள் விடயத்தில் இவர்களும் ஆட்சியாளர்களின் சிந்தனையிலேயே இருந்தனர் என்பதே உண்மை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நீலிக் கண்ணீரையே வடித்தனர். தற்போது எதிர்க் கட்சியில் இருந்து கொண்டு அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என ஊடகங்களுக்குக் கூறுவது அரசியல் ஏமாற்று நாடகமே.

தமிழர் அரசியல் விடுதலைக்கான செயற்பாட்டினை போராளிகளும், மாவீரர்களும், அரசியல் கைதிகளும் உயிர்ப்புடன் வைத்திருந்தனர்.இன்றும் வைத்திருக்கின்றனர் (சோரம் போனவர்களைப் தவிர ஏனையோர்) என்பதை மறக்க முடியாது. இவர்களைத் தவிர்த்து அல்லது மறந்து விடுதலை அரசியல் செய்வது என்பது அரசியல் கொலைக்கு ஒப்பாகும். அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு எங்கும் முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டம் மேலும் வலுப்பெறல் வேண்டும். இது குறுகிய அரசியல் நோக்கத்திற்கு அப்பால் நிகழ் வேண்டும் என்பதே மக்கள் எதிர்பார்ப்பு.

இதற்கு வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துபடுத்தி தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் அழுத்தம் கொடுத்து விடுதலையை துரதப்படுத்தல் வேண்டும் எனவும் தமிழர்களின் அரசியல் எதிர்பார்ப்பிற்கு எதிராக செயற்பட வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்கின்றோம்.


அத்தோடு பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்கவென பல்வேறு நாடுகளிடம் மண்டியிட்டு நாட்டின் இறைமையை, அரசியலை, வளங்களை தாரை வார்த்து சமரசம் பேசி பல்வேறு நாடுகளுடன் ஒப்பந்தம் செய்யும் ஆட்சியாளர்கள் (மிக அண்மையில் இந்தியாவோடும் தற்போது சீனாவுடன் செய்து கொண்டிருக்கின்ற பந்தங்கள் உட்பட) இந்நாட்டில் மிக நீண்ட கால வரலாற்று பாரம்பரியங்களை கொண்ட தேசிய இனமான தமிழர்களோடு அரசியல் ஒப்பந்தம் செய்யத் தயங்குவது ஏன்? நாட்டின் எதிர்காலம் நலன் கருதி தமிழர்களின் அரசியல் அபிலாசைகளோடு முன் செல்ல அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்து ஆட்சியாளர்கள் தம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் கேட்கின்றோம். – என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




**சீமான், ஈ.வே.ரா.பெரியாரை இந்த வாங்கு வாங்குகிறாரே! பார்த்தீர்களா?**

பதில் : வரவர சீமானின் துணிவும், ஆளுமையும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. பெரியார் மேல், குற்றம் சாட்டுகிற இந்தத் துணிவு, இதுவரை எந்த எதிர்க்கட்சிக்கும் வந்ததாய்த் தெரியவில்லை. துணிந்து குளவிக் கூட்டுக்குக் கல் எறிந்துவிட்டு, அச்சப் படாமல் நிமிர்ந்து நிற்கிறார் சீமான்.

இவர் சொன்ன பிறகுதான் பலரும், அவர் கருத்தை வழிமொழியத் தொடங்கியிருக்கிறார்கள். இதுநாள் வரைக்கும், திராவிடர் கழகக்காரர்களின் மேலிருந்த அச்சத்தால், வாய்மூடிக் கிடந்த இவர்களுக்கு சீமானின் நிமிர்வு துணிவைத் தந்திருக்கிறது. இதனை மற்றவர்கள் யாரேனும் செய்திருந்தால், திராவிடக் கழகக்காரர்கள், அப்படிச் செய்தவரைத் தமிழர்



களின் எதிரியாக்கி இருப்பார்கள். சீமான், அவர்கள் பாத்தியில் இருந்தே புறப்பட்டு, வெளியில் வந்திருக்கும் ஒரு விருட்சம். அதனால், அவரது கருத்தை இவர்களால், நிராகரிக்க முடியாதிருக்கின்றது.

“செருப்பால் அடிப்போம்“, “முட்டையால் அடிப்போம்“ என்றெல்லாம் கூறி, மிரட்டி அவரது வாயை அடைக்கச் சிலர் முயற்சிக்க (இங்குள்ள சிலரைப் போல) அது பற்றிச் சிறிதும் அச்சமில்லாமல், தனது பாதத்தின் அளவைச் சொல்லி, எறிவதானால் அந்த அளவினால் ஆன செருப்புகளை எறியுங்கள் என்றும், முட்டையைச் சும்மா எறியாமல், நான் சொல்லுவது போல “ஆம்லட்“ ஆகப் பொரித்து எறியுங்கள் என்றும் கூறி, கிண்டல் செய்து, அந்த எதிராளிகளின் பயமுறுத்தும் அஸ்திரங்களை, முனை முறியச் செய்திருக்கிறார் சீமான்.

இதுநாள் வரையும், “பெரியார் எனப் பட்டம் சூட்டி நம் இனக் காவலராய், அவரது விம்பத்தைப் பிரமாண்டமாய் வளர்த்து வைத்து, திராவிடக் கழகங்கள் செய்த, பொய் மாயை எனும் பலூனில், சீமான் முதல் ஊசியை ஏற்றியிருக்கிறார். இரணியனை அழிக்க, அவன் வீட்டிலிருந்தே பிரகலாதன் வெளிவந்தாற் போல, வெளிவந்திருக்கும் சீமானின் கருத்தால், அந்த பலூன் பெரும்பாலும் உடைந்த மாதிரித்தான்.

❄ ❄ ❄ ❄ ❄

**கேள்வி : நடிகர் “விஜய்“ தமிழக ஆளுநரைச் சந்தித்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**



பதில் : எதிரிக்கு எதிரி, எனக்கு நண்பன் என்ற கதைதான். திமுக அரசை எப்படியெல்லாம் மிரட்ட முடியும் என்பது விஜய்க்கும் தெரிந்திருக்கிறது. ஆளுநருக்கும் தெரிந்து இருக்கிறது. ஒரே ஒரு குறை, விஜய் “ஏசி“ அறைகளுக்குள் இருந்து கொண்டே, அரசியல் நடத்தப் பார்க்கிறார். கொஞ்சம் வெயிலுக்குள் இறங்கி நடந்தாற்தான் மக்களிடம் சென்று சேர முடியும்.

❄ ❄ ❄ ❄ ❄

**கேள்வி : தசரதனுக்கு அறுபத்து மூவாயிரம் மனைவியர் இருந்ததாய் இராமாயணத்தில் சொல்லப்படுகிறதே. அது உண்மயாய் இருக்குமா?**

பதில் : இராமாயணத்தில் அறிய வேண்டிய விஷயம் ஆயிரம் இருக்க, உங்கள் மனம் இந்த விடயத்திற்தான் செல்கிறது. இது ஆபத்தானது. மற்றவர்களிடம் அழுக்குத் தேடிச் சுவைக்க நினைப்பது ஈனச் செயல். ஆயிரம் நல்ல உணர்வு இருந்தாலும், பன்றி “எதையோ“தான் நாடுமாம். அழுக்கைத் தேடி ரசிக்கத் தலைப்பட்டால், நம் வாழ்க்கையும் அழுக்காகத்தான் மாறிவிடும். எனவே தீயதை நாடும் பழக்கத்தை விட்டுவிடுங்கள். இவ்வளவும் உங்களுக்கான எனது ஆலோசனைகள். இனி உங்களின் கேள்விக்கு வருகிறேன்.

மிகைபடச் சொல்லிச் சுவையூட்டுதல் என்பது

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

இலக்கியங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு விடயந் தான்! வாசகர்களின் கற்பனை வளத்தை மிகுதிப் படுத்துவதற்காகவே அதனைச் செய்ய அனுமதித்து இருக்கிறார்கள். தசரதனின், அறுபதாயிரம் ஆண்டு ஆயுள், அறுபதாயிரம் மனைவியர் என்பவை எல் லாம் அம் மிகைப்படுத்தலுட்தான் அடங்கும்.

அதுவன்றி, அக் காலத்து அரசர்கள் மற் றைய அரசர்களுடனான உறவைப் பெருப்பித்து தம் தேசத்தை வலிமைப்படுத்துவதற்காக, பல திரு மணங்களைச் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. அதனாலும் தசரதனது மனைவியர் தொகை இப்படி விரிந்திருக்கலாம் என்று, வேறு சிலபேர் சொல்லு கிறார்கள். எப்படியானாலும், அறுபதாயிரம் எனும் தொகை சற்று மிகை என்றே படுகிறது.

நம் நிகழ்காலத்தில், ஒன்றுமே இல்லாத சிலது கள், தம்மை இனத்தின் தலைவர்களாய் உரைத்து, மக்கள் மன்றில் சிறிதும் நாணமில்லாமல், "பல்லிருப்ப தால் பகோடாக் கடிக்கிறோம்" என, தமது ஒழுக்கயீ னத்தைச் சாதனையாய்ச் சொல்லிக்கொண்டு, பலரையும் மேய்த்துக் கொண்டிருப்பதைப் பார்த் தால், ஆளுமையிற் சிறந்தவனான தசரதன், ஒரு வேளை அறுபதாயிரம் பேரைத் திருமணம் செய்தி ருப்பானோ? என்று கூட நினைக்கத் தோன்றுகிறது.

❄ ❄ ❄ ❄ ❄

**கேள்வி : உடல் இச்சை வந்தால், அதைத் தீர்க்க, தாயோ, சகோதரியோ யாரை யேனும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், தமிழ், காட்டுமிராண்டிகளின் மொழி என்றும், திருக்குறளை மலம் என்றும், நம் இலக்கியங்களின் கதா நாயகிகளை ஒழுக்கம் கெட்டவர்கள் என்றும், ஈ.வே.ரா. பெரியார் பேசியதாய், சீமான் தூக்கிப் போட்டிருக்கும் குண்டைப் பற்றி என்ன நினைக்கறீர்கள்?**

பதில் : நான் நினைப்பது ஒரு பக்கம் இருக் கட்டும். அந்தச் செய்திகளைக் கேட்டு, தழிழகம் மட்டு மல்லாமல், தமிழ் உலகமே ஆடிப் போயிருக்கிறது. மேற் சொன்ன செய்திகள் மட்டுமல்லாமல், ஈ.வே. ரா.இன் விபச்சாரிகள் உடனான தொடர்பு, வேலைக் காரப் பெண்களுடன், அவர் செய்த சில்மிஷங்கள் என அடுத்தடுத்து வெளி வரும் செய்திகளால், அவ ரைப் "பெரியார்" என அழைத்து, மரியாதை செய்த தமிழ் மக்கள் அனைவரும், நாணித் தலைகுனிந்து நிற்கிறார்கள்.

கேள்வியில், நீங்கள் சொன்ன உடலிச்சை வந்தால் என்ன செய்வது என்ற செய்தியிற் கூட, "ஆண்களை முன்னிலைப்படுத்தி, பெண்களைப் போகப் பொருளாக்கி உரைத்திருக்கும் இவரையா? பெண் விடுதலையின் நாயகனாய் இதுவரை உரைத்தோம்" என, நங்கையர் எல்லாம் நாணித் தலைகுனிந்து நிற்கிறார்கள்.

சீமான் போட்டிருக்கும் பந்தின் வீச்சில், பெரி யாரின் விக்கற்றுக்கள் எல்லாம் வீசி எறியப்பட்டு விட்டாற் போல் தெரிகிறது. "முற்பகல் செய்யும் பிற்பகல் விளையும்" என்பது இதனைத்தான். ஒரு காலத்தில் மற்றவர்களை, தன்னால் முடிந்தளவு கேவலமாக இழிவு செய்து வந்தவர், இன்று அவர் வளர்த்த பாத்தியின் பயிர்களாலேயே, இழிவு செய்யப்பட்டிருக் கிறார்.

இதைத்தான் இயற்கையின் சக்தி என்பது. எவ் வளவுதான், மற்றவர்களின் மூளையைக் கழுவி, பொய்யை மெய்யாக்கினாலும், அது தனது உண்மை வடிவை, என்றோ ஒரு நாள் காட்டத்தான் செய்யும் என்பது நிரூபணமாகி இருக்கிறது. "கெட்டிக்காரனின் பொய்யும் புரட்டும் எட்டு நாளைக்குத் தான்" என்று, சும்மாவா சொன்னார்கள். பொய்யை விற்றுப் பிழைத்து விடலாம் என நினைத்திருக்கும் நம் மவர்கள் சிலருக்கும், இது பாடமாகட்டும்.

நிறைவாக ஒன்றைச் சொல்ல வேண்டும். பெரியார் மேல் சீமான் சொல்லும் குற்றச்சாட்டுகள் உண்மையானவை என்பதற்கான சான்றுகளை, சீமானோ அவரைச் சார்ந்தவர்களோ இன்னும் வெளிப்படுத்த வேண்டியே இருக்கிறது.

❄ ❄ ❄ ❄ ❄

**கேள்வி : அமெரிக்க காட்டுத் தீ பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில் : காலாகாலமாக நான் சொல்லி வருகிற ஒரு விடயத்திற்கான சான்றினை, இயற்கை நிரூ பித்துக் காட்டுவதைக்கண்டு, மகிழ்ச்சியும், அதிர்ச் சியும் அடைந்து நிற்கிறேன். நாம் எத்தகைய ஆற்றல் உள்ளவர்களாக இருந்தாலும், இயற்கைக்குள் தான் நம் வாழ்வு அமைய வேண்டியிருக்கிறது.

இயற்கை என்பது, இறை வகுத்த ஒழுங்கு. கெட்டித் தனங்கள் வாய்த்து விட்டன. இனி எம்மை ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியாது என நினைந்து, அவ் வியற்கை ஒழுங்குகளை அசைக்க முற்பட்டால், அது தனிமனிதன் ஆனாலும், ஒரு மனிதக் குழுவானா



லும், அல்லது ஒரு நாடே ஆனாலும் அவற்றை, இயற்கை ஏதோ வகையில் தண்டித்தே தீரும் என்பது எனது அசையாத நம்பிக்கை.

இதைப் பல இடங்களிலும், பலதரமாய் எழுதி யும், சொல்லியும் வந்திருக்கிறேன். இந்த நம்பிக் கையால்த்தான், காலாகாலமாக என்மேல் எறியப்பட்டு வரும் பாதகமான "அஸ்திரங்களை" எல்லாம், பய மின்றித் தாங்கி நிற்கின்றேன்.

அமெரிக்கா, ஈராக்கில் நடந்து கொண்ட விதம், லிபியாவில் நடந்து கொண்ட விதம், தற்போது பாலஸ் தீனத்தில் நடந்து கொண்டிருக்கும் விதம் அனைத் தும், இயற்கைக்கு மாறானவை. சதாம் /ஹுசைன், கடாபி போன்றவர்களின் மரணங்களை அமெரிக்க வால் செய்யப்பட்ட கொலைகளாகவே, உலகம் இன்றும் கருதுகிறது.

பாலஸ்தீனத்தின் மீதான அண்மைக்கால இஸ்ரேலின் கொடுந் தாக்குதலின் பின்னணி யில் நின்று செயற்படுவது அமெரிக்காதான். உலக நாடுகள் எல்லாம் கெஞ்சிக் கேட்டும், சிறிதும் இரக்கப் படாமல், வைத்தியசாலைகள், அகதி முகாம்கள் உட் பட அனைத்து இடங்களிலும் குண்டு வீசும் இஸ்ரேலின் துணிவிற்கு, அதன் காவலனாய்ச் செயற்படும் அமெரிக்காதான், முக்கிய காரணமாய் இருக்கிறது.

மனித பலத்தாலும், ஆயுத பலத்தாலும், அரசியற் பலத்தாலும், நீதியையும், தர்மத்தையும் விழுங்கி ஏப்பம் விட்டுவிடலாம் என நினைந்த, அமெரிக்காவின் அட்டூழியத்திற்கு இயற்கை, தனது பலத்தைக் காட்டி முட்டுக்கட்டை போட்டிருக்கிறது. வந்திருப்பது வெறும் முன்னெச்சரிக்கைதான். இயற்கை முழுமையாய்த் தனது பலத்தைக் காட்டுவதற்கு முன்பாக, அமெரிக்கா திருந்தியாக வேண்டும். இல்லாவிட்டால், இயற்கை அமெரிக்காவை ஈவிரக்கமின்றித் தண்டித்துவிடும்.

இவ்வுண்மையை, அமெரிக்க மக்களும் விரைவில் உணர்ந்தாக வேண்டும்.

❄ ❄ ❄ ❄ ❄

**கேள்வி : ஜனாதிபதியின் சீனப் பயண முடிவுகள் என்னாகப் போகின்றன?**


பதில் : சிறிதாக நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் இக் கேள்வி மிகப் பெரிய கேள்வியாகவே

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

படுகிறது. இரண்டு பலசாலிகளின் போட்டிக்கிடையில் அகப்படும் ஒருவன், உண்மையில் பரிதாபத்திற் குரியவனாகத்தான் இருப்பான். அந்த நிலைதான் இன்று இலங்கைக்கும் ஏற்பட்டிருக்கிறது.

பேரினம், சிற்றினம் என்ற, இரண்டு இனங்களுக் கிடையில் ஏற்பட்ட பகைக்குள் அகப்பட்டு இதுவரை சின்னாபின்னமாகிக் கொண்டிருந்த இலங்கையை, ஏதோ மாயம் செய்து ஒருமைப்படுத்தி, அனைவரது ஆதரவையும் பெற்று, வெற்றி கொண்டு சாதனை செய்த நமது ஜனாதிபதி, சீன, இந்தியப் போட்டிக் குள் அகப்பட்டுத் தத்தளிக்கும் நாட்டையும், மீட்



டெடுப்பாரா? என்ற கேள்வி விஸ்வரூபமாய் இன்று விரிந்து நிற்கிறது.

ஒரு பக்கம், அயல் நாடு என்ற உரிமையுடன் இந்தியா இழுக்க, மறுபக்கம் அதிக துணைபுரியும் நாடு என்ற வகையில் சீனா இழுக்க, இவர்களில் எவரது கைகளிலும் முழுமையாய் அகப்பட்டு விடாம லும், அதே நேரத்தில் எவருடனும் பகைத்துக் கொள்ளாமலும் சமாளிப்பது என்பது லேசான வேலையல்ல.

தேச அரங்கிற் செய்த அதிசயத்தை, உலக அரங் கிலும் செய்து விட்டாரேயானால், ஜனாதிபதி சரித்திர நாயகனாய் ஆகிவிடுவார். இந்தியாவைச் சமாளித்துத் திரும்பியதே பெரிய விடயந்தான். இப்போது சீனா விற்குள் இறங்கியிருக்கிறார். என்னாகப் போகிறே-தா? என்ற ஆவலுடன் மக்கள் காத்திருக்கிறார்கள். அவர் பெறப்போகும் வெற்றியோ, தோல்வியோ அவரை மட்டுமல்ல, நாட்டு மக்கள் அனைவரையும் பாதிக்கும் என்பது மட்டும் சர்வநிச்சயம்.

அதனால், அவரது வெற்றி நோக்கி, அனைத்து மத மக்களும் அவரவர் தெய்வங்களைப் பிரார்த்-திப்போமாக!

❄ ❄ ❄ ❄ ❄

**கேள்வி : சாமிமார்கள் அத்தனை பேரும் கள்வர்கள்தானா?**

பதில் : ஒரு குழுமம் பற்றிய இத்தகைய பொது அபிப்பிராயங்கள் ஒருநாளும் உண்மையாய் இராது என்பது நிச்சயம். இந்த உலகம், நன்மையும், தீமையும் கலந்துதான் கிடக்கிறது. தனி மனிதர்கள் கூட அப்படித்தான் இருக்கிறார்கள். அதனால், ஒருவரை முழுமையாய் தூயவர் என்றோ, தீயவர் என்றோ சொல்ல முடியாது. சொல்லக் கூடாது. இதற்குச் சாமிமார்களும் விலக்கல்லர். டாக்டர் களும் விலக்கல்லர்.

❄ ❄ ❄ ❄ ❄

**கேள்வி : தமிழ் நாட்டில் நடந்த, அயல கத் தமிழர்களுக்கான மாநாட்டில் நம் தமிழ்த் தலைவர்களுக்குக் கொடுக் கப்பட்ட மரியாதை, போதும் என்று நினைக் கிறீர்களா?**

பதில் : இல்லை! மற்றைய நாடுகளிலிருந்து அந்த மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் எல்லோரும், ஏதோ வகையில் தமிழ் நாட்டிலிருந்து சென்ற தமிழர் கள்தான். இலங்கைத் தமிழர்கள் அப்படியானவர் கள் அல்லர். அவர்கள் இலங்கையின் பூர்வீகக் குடிகள். அதனை ஏற்க மறுத்ததுதான், இதுநாள்



வரை நடந்த இலங்கைப் பிரச்சனையின் அடிப்படைக் காரணம்.

தமிழ் நாட்டுத் தமிழர்கள் எப்படி அந்நாட்டின் பூர்வீகக் குடிகளோ, அப்படித்தான் இலங்கைத் தமிழர்களும், தம் நாட்டின் பூர்வீகக் குடிகள் எனும் போது, தமிழ் நாட்டுத் தலைவர்களுக்கு அடுத்ததாக இலங்கைத் தமிழர்களுக்கு நிகழ்ச்சி மேடையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யாதது ஒரு குறைதான்.

அவர்களுக்கு, நமது பெருமை தெரியாமற் போனது அல்ல. நம் தலைவர்களுக்கு அப் பெருமை தெரியாமற் போனதுதான் பெரிய கொடுமை. ஏதோ அம் மாநாட்டில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்ததால், "ஜன்ம சாபல்யம்" அடைந்தவர்கள் போல அவர்கள் பட்டபாட்டைக் காண சிரிப் புத்தான் வந்தது. வெறுமனே சபையில் குந்தியிருந்த மையையே அவர்கள் பெருமையாய்க் கருதியமையை என் சொல்ல? இதில், தமிழகத் தலைவர்களுடன் "செல்பி" வேட்டைவேறு.

அடுத்த முறையேனும், மேடையில் தமக்கான இடத்தையும், பேசும் உரிமையையும் பெற்றுத்தான், இவர்கள் இம் மாநாட்டிற் கலந்து கொள்ளவேண்டும் என்பது எனது விருப்பம்.

❄ ❄ ❄ ❄ ❄

**கேள்வி : நடந்துவரும் "தங்கம் சர்ச்சை யில்" நீங்கள் பண்பாகப் பேசி வரு கிறீர்கள், உங்களது எதிர் அணியின ரிடம் அந்தப் பண்பைக் காண முடிய வில்லையே?**

பதில் : எவர், எவர் சட்டியில், எது, எது இருக் கிறதோ, அது, அது தானே அவர்களின் அகப்பை யில் வரும். விட்டுத் தள்ளுங்கள்.

❄ ❄ ❄ ❄ ❄

**கேள்வி : "ட்ரம்ப்" அயல் நாடுகளை விழு-ங்கப் போகிறார் போலத் தெரிகிறதே?**

பதில் : தெரிகிறது என்ன தெரிகிறது? அவரே அதனை வெளிப்படையாகச் சொல்லியிருக் கிறாரே. ஓரளவாவது எஞ்சியிருக்கும் உலகத்தின் சமநிலையைக் கெடுப்பதென்று மனிதர் முடிவு செய்து விட்டார் போல. வாபா வாங்கா, ஸ்ரீபன் ஹோக் கின்ஸ் போன்ற தீர்க்கதரிசிகள் எல்லாம், இந்த ஆண்டு உலகிற்குத் தீமை விளைவிக்கும் ஆண்டாகத் தான், இருக்கப்போகிறது என்று வேறு சொல்லி யிருக்கிறார்கள். அதைத்தான் "ட்ரம்ப்" தொடங்கி



வைக்கிறார் போல. இயற்கை வேறு, தீ மூட்டி அங்கு அபசகுனம் காட்டுகிறது. உலகின் நன்மைக்காக எல்லோரும் ஒருமித்துப் பிரார்த்திப்போம்.

❄ ❄ ❄ ❄ ❄

# எம்.ஜி.ஆர் பிறந்தநாளையொட்டி தமிழக அரசு சார்பாக மரியாதை





முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் பிறந்தநாளையொட்டி, அ.தி.மு.கவினர், பிரதமர் நரேந்திர மோடி, தமிழக அரசு சார்பாகவும் மரியாதை செலுத்தப்பட்டது.

முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் 108 ஆவது பிறந்தநாளையொட்டி, சென்னை ராயப்பேட்டை அவ்வை சண்முகம் சாலையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் அமைந்திருக்கும் எம்.ஜி.ஆரின் உருவச்சிலைக்கு முன்னாள் முதல்வரும் அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

மேலும், அவரது உருவப் படத்திற்கும் மரியாதை செலுத்தியதுடன், கட்சிக் கொடியை ஏற்றிவைத்து, கேக் வெட்டி, பொதுமக்களுக்கும் தொண்டர்களுக்கும் இனிப்புகள் வழங்கினர். எம்.ஜி.ஆரின் 108 ஆவது பிறந்தநாள் நிகழ்ச்சியில் அமைச்சர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் பிறந்தநாளுக்கு பிரதமர் நரேந்திர மோடியும் புகழாரம் சூட்டி, தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

மேலும், சென்னை கிண்டியில் எம்.ஜி.ஆரின் திருவுருவச் சிலைக்கு, அமைச்சர்கள் மாலை அணிவித்து, மலர்தூவி, மரியாதை செலுத்தியுள்ளனர் றன தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழக பா.ஜ.க. தலைவரான அண்ணாமலையும் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் பிறந்தநாளில், அவரை வாழ்த்தி சிறந்த தேசியவாதி என்றும், விளிம்பு நிலையில் உள்ளவர்களுக்கும் உதவியவர் என்றும் புகழாரம் சூட்டினார்.

இவர்கள்தவிர, நடிகர் சங்க வளாகத்திலும் முன்னாள் முதல்வரும் நடிகருமான எம்.ஜி.ஆரின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து, மலர்தூவி தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினர்கள் மரியாதை செலுத்தினர்.



## கூத்தாடி என்ற கூற்றை உடைத்தவர் எம்.ஜி.ஆர்

### விஜய் உருக்கம்

"அளவற்ற வறுமையைத் தாண்டினார். கூத்தாடி என்ற கூற்றைச் சுக்குநூறாக உடைத்து, தமிழக அரசியல் வரலாற்றின் மையம் ஆனார் எம்.ஜி.ஆர்."

– இவ்வாறு மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆருக்கு தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக வெற்றிக் கழகம் தலைவர் விஜய்

எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"அளவற்ற வறுமையைத் தாண்டினார். கூத்தாடி என்ற கூற்றைச் சுக்குநூறாக உடைத்து, தமிழக அரசியல் வரலாற்றின் மையம் ஆனார். அசைக்க முடியாத வெற்றியாளர் ஆனார். அவரே தமிழக அரசியலின் அதிசயம் ஆனார். இறந்தும் வாழும், புரட்சித் தலைவருக்குப் பிறந்தநாள் வணக்கம்." என்று பதிவிட்டுள்ளார்.

## புதுடில்லியில் கடும் பனிமூட்டம்

### 200 விமான சேவைகள் பாதிப்பு



புதுடில்லியில் நிலவி வரும் கடுமையான பனிமூட்டம் காரணமாக 200 இற்கும் மேற்பட்ட விமானங்களின் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தலைநகர் புதுடில்லி, பஞ்சாப், ஹரியானா, இராஜேஸ்தான், உத்தரபிரதேசம் மற்றும் மத்திய பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை முதலே கடுமையான பனிப்பொழிவு காணப்பட்டுள்ளது.

வீதியில் ஆள்நடமாட்டம் கூட தெரியாத அளவுக்கு பனிமூட்டம் இருந்தது. குறிப்பாக, டில்லியின் பாலம் விமான நிலையம், பஞ்சாப்பின் அமிர்தரஸ் விமான நிலையம், உத்தரபிரதேசத்தின் வாரணாசி, ஆக்ரா மற்றும் லக்னோ விமான நிலங்களில் மிகவும் கடுமையான பனிமூட்டம் இருந்துள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக புதுடில்லி ஐ.ஜி.ஐ., விமான நிலையத்தின் 217 விமானங்களின் சேவை தாமதமாகியது. காலை 10 மணிக்கு வர இருந்த 149 விமானங்கள் 25 நிமிடங்கள் தாமதமாக வந்து சேர்ந்தன.

இது குறித்து புதுடில்லி விமான நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"பனி மூட்டத்தால் விமான சேவையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, பயணிகள் அந்தந்த விமான நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, விமானங்களின் புறப்பாடு மற்றும் வருகை குறித்து தகவலை தெரிந்து கொள்ளலாம்," என தெரிவிக்கப்பட்டது.




# போர் நிறுத்த ஒப்பந்தத்தை அங்கீகரித்தது இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை!

இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை காசா போர் நிறுத்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்கப் பரிந்துரைத்துள்ளது.

எனினும், இந்த ஒப்பந்தம் அரசாங்க அமைச்சரவையிலும் நிறைவேற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தங்கள் மூன்று கட்டமாக நடைபெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

முதல் கட்டமானது, நாளை ஞாயிற்றுக்கிழமை அமுலுக்கு வரவுள்ளதுடன், அது ஆறு வாரங்களுக்கு நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில், காசாவில் உள்ள பணயக்கைதிகள் மற்றும் இஸ்ரேலில் உள்ள பாலஸ்தீனிய கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

# தென்கொரிய விமான விபத்துக்கு பறவை மோதியமையே காரணம்!



அண்மையில் இடம்பெற்ற தென்கொரிய விமான விபத்திற்கு பறவை மோதியமையே காரணம் என தெரிய வந்துள்ளது.

கடந்த மாதம் இடம்பெற்ற விமான விபத்தில் 179 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்துக்கு பறவை மோதியதே காரணம் என்று உறுதி செய்யும் வகையில் ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

விமானத்தின் கருப்பு பெட்டிகளை மீட்டு, விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

விபத்து நடப்பதற்கு 4 நிமிடங்களுக்கு முன்பு, விமானத்தின் பிரதான இயந்திரப் பகுதியில் பறவை ஒன்று மோதியதாகவும், இதனால், அவசரகால எச்சரிக்கையை விமானிகள் வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதை உறுதி செய்யும் விதமாக, விபத்துக்குள்ளான விமானத்தின் இயந்திரத்தில் பறவையின் இறகு மற்றும் இரத்தக்கறை இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# இம்ரான் கானுக்கு சிறைத் தண்டனை!

ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபி ஆகியோருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் ஊழல் தடுப்பு நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பில் இம்ரான் கானுக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது. மேலும் புஷ்ரா பீபிக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனிலிருந்து பாகிஸ்தான் அரசிற்கு வர வேண்டிய நிதியை மோசடி செய்தனர் என குற்றம் சாட்டப்பட்டது.



இந்தக் குற்றச்சாட்டைப் பாகிஸ்தானின் ஊழல் தடுப்பு தேசிய பொறுப்புடைமை பணியகம் கடந்த 2023 ஆம் ஆண்டில் முன்வைத்தது.

வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், 3 முறை தீர்ப்பு திகதி ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தற்போது அந்த வழக்கில் இருவரையும் குற்றவாளிகள் என நீதிபதி நசீர் ஜாவேத் ரண தீர்ப்பளித்துள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 18.01.2025




உங்களிடம் அமைதியின்மை மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனால் உங்கள் தன்னம்பிக்கை குறையும். என்றாலும் வெற்றி பெற நீங்கள் உற்சாகமாக முயல வேண்டும்.

உங்கள் மதிப்பை உங்கள் மேலதிகாரிகளிடம் நிரூபிக்க வளர்ச்சியை உண்டாக்கும் புதுமையான யோசனைகள் தேவை. இன்று பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படக் கூடாது. நல்லுறவைப் பராமரிக்க சகஜமான அணுகுமுறையும் அனுசரித்து நடந்து கொள்ளவும் வேண்டும்.

குடும்பத் தேவைக்காக நீங்கள் செலவு செய்ய நேரும். அது தேவையற்ற செலவாக இருக்கும். அதிக செலவு காரணமாக சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று நன்மை தீமை எனப் பலன்கள் கலந்து காணப்படும். இன்று நிச்சயமற்ற தன்மை காணப்படும். முயற்சியில் வெற்றி பெறுவதற்கு மிகுந்த பொறுமை அவசியம்.

இன்று கவனக் குறைவு காணப்படும். உங்கள் செயல் திறன் மந்தமாக இருக்கும். பணியின் போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது சகஜமாக இருக்க வேண்டும். அவரி கருத்துக்களை கவனமாக கேட்பதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

செலவினங்கள் அதிகமாக காணப்படும். பாதுகாப்பிற்காக சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். உணவு முறையில் கவனம் தேவை. முறையான சிகிச்சையால் விரைவில் குணம் கிடைக்கும்.




இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள். முக்கியமான முடிவுகள் எடுக்க இது உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாக இருப்பார்கள். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் அபரிமிதமாக இருக்கும். சுப நிகழ்ச்சிகளுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் இலக்குகளை அடைய கடுமையாகப் போராட வேண்டும். திட்டமிட்டு நம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும். அஞ்சாத மன ஆற்றலும் நம்பிக்கையும் கொண்டால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று நீங்கள் பொறுமையுடன் செயல்பட்டால் உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்ற இயலும். உங்களுக்கு கொடுக்கப்பட பணிகளைச் செய்யும் போது யோசித்து சிறப்பாக ஆற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை காரணமாக தம்பதியரிடையே கருத்து வேறுபாடு காணப்படும். எனவே நட்பு முறையோடு அணுகினால் நல்லுறவைப் பராமரிக்கலாம்.

இன்று ஏற்படும் கூடுதல் செலவு காரணமாக உங்களுக்கு வருத்தம் ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. செலவுகளை கண்காணியுங்கள்.




முக்கியமான நேரங்களில் நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இது உங்களின் வளர்ச்சியை பாதிக்கும். பெரியவர்களின் ஆலோசனை கேட்டு நடந்து கொள்வது சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் மிதமான வளர்ச்சியே காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும். இதற்கு நேரம் செலவாகும். உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடனான உறவு சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதிப்பு தரக்கூடிய அத்தகைய உணர்வுகளை தவிர்த்தால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

பணப்புழக்கம் ஏமாற்றத்தை அளிக்கும் விதமாக இருக்கும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் அடிப்படைத் தேவைகளை சமாளிப்பது கூட கடினமாக இருக்கும்.




இன்று நீங்கள் அமைதியின்றி உணர்ச்சி வசப்பட்டு இருக்கும் வகையிலான சூழ்நிலை காணப்படும். இன்று சமநிலையோடு இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் மற்றும் வளர்ச்சியை அளிக்கும்.

திறமையாக பணியாற்ற பணிகளை ஆற்றும் போது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

இன்று உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாக, பேசுவதற்கு முன் யோசித்து பேச வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. பணத்தைக் கையாளும் போது கவனம் தேவை.

உங்கள் தந்தையின் உடல் நலத்துக்காகப் பணத்தைச் செலவு செய்ய நேரும். நெஞ்செரிச்சல் காரணமாக உங்கள் தந்தை அவதிப்பட நேரலாம்.




இன்று செழிப்பாக இருக்க நீங்கள் கடுமையாக முயற்சிக்க வேண்டும். இன்று நல்ல பலனடைய அதிர்ஷ்டமான நாள். விரைந்து முடிவெடுத்தல் மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் இது சாத்தியம். இந்து மகிழ்ச்சி கரமான நாளாக இருக்கும்.

இன்று பணியிடத்தில் திருப்தி காணப்படும். உங்கள் திறமைகளை நிரூபிப்பதற்கான புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்கும் இடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். இன்று உங்களுக்கு ஊக்கத் தொகை போன்ற வகையில் விரைவாகப் பணம் கிடைக்கும்.




உங்கள் லட்சியங்களை அடைய இன்று சாதகமான நாள். இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பது நல்ல பலனைத் தரும்.

புதிய வாய்ப்புகள் உங்களுக்கு நல்ல பலன் தரும். உங்கள் பணிகளை முடிக்க ஏதுவான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையோடு பழகுங்கள். உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் முக்கியமான விழா பற்றி கலந்தாலோசிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி இன்று ஸ்திரமாக இருக்கும். சேமிப்பின் மூலம் உங்கள் நிலை உயரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். திருப்தியான மன நிலை காரணமாக நல்ல உடல் நிலை காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.01.2025




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்றைய கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க தேவையான ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் மனதை ஆன்மீகத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியிடத்தில் சில சவால்கள் காணப்படும். ஆனால் திட்டமிட்டு செயலாற்றினால் சமாளிக்கலாம். ஈடுபாட்டுடன் பணி செய்தால் சிறந்த பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உரையாடும் பொழுது கவனம் தேவை. உங்கள் பிரியமானவருடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

தேவையற்ற செலவினங்கள் காணப்படுவதால் கவனமாகச் செலவு செய்ய வேண்டும். நிதி வளர்ச்சியில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று சமநிலையோடு காணப்படுவீர்கள். இன்று புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பிறருடன் கலந்து பேசி மகிழ்வீர்கள்.

கடினமான பணிகளிக் கூட எளிதாகச் செய்வீர்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உண்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் இருவருக்கும் இடையே நல்லுறவு காணப்படும்.

உங்கள் நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். பொறுமையுடனும் உறுதியுடனும் நீங்கள் சமாளிக்க வேண்டும். விஷயங்கள் உங்கள் கட்டுப்பாட்டை மீறிக் காணப்படும். அமைதியான அணுகுமுறை கொண்டு கையாள வேண்டும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற இயலாது. சகபணியாளர்கள் ஒத்துழைக்க தவறுவார்கள். மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்காது.

உங்கள் துணையிடம் வன்மையான போக்கை காண்பித்து கடுமையாகப் பேசுவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய போக்கை கைவிட வேண்டும்.

வரவை விட செலவு அதிகமாக இருக்கும். நிதிநிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




உங்கள் லட்சியங்களை அடைவதற்கு இன்று சாதகமான நாள். இன்றைய நாளின் செயல்களை நீங்கள் எச்சரிக்கையுடனும் விவேகத்துடனும் செய்வீர்கள். சமயோஜித புத்தியின் மூலம் செயல்படுவதால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

பணியின் செயல்திறனில் வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அர்ப்பணிப்புடன் பழகுவீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை காரணமாக உறவில் மகிழ்ச்சி நிலவும்.

உங்களின் கடின உழைப்பின் மூலம் .ஊக்கத் தொகை மற்றும் சலுகை வகையில் சில கூடுதலான பணம் பெறுவீர்கள்.

அமைதியான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# மன்னார் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் சூத்திரதாரி வெளிநாட்டில் இருப்பவராம்!

## அவருக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை பெற்றுள்ளது பொலிஸ்



மன்னார் நீதிமன்றத்தின் முன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது இருவர் உயிரிழந்துள்ள சம்பவத்தை வழி நடத்தியவர் வெளிநாட்டில் இருக்கின்றார். அவருக்கு எதிராக சர்வதேச பொலிஸ் மூலம் சிவப்பு எச்சரிக்கையை பெற்றுள்ளதாகப் பதில் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் நீதிமன்றத்தின் முன்னால் வியாழக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது இருவர் உயிரிழந்துள்ளனர். மாட்டு வண்டி சவாரியை அடிப்படையாக கொண்டு முரண்பாடு எழுந்தது.

முதல் சம்பவத்தில் 2022 ஆம் ஆண்டு இருவர் உயிரிழந்தனர். அதனைத் தொடர்ந்து ஒருவர் வாகனத்தினால் மோதப்பட்டு கொலை செய்யப்பட்டார். 2023 ஆம் ஆண்டு இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

இறுதியாக வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்திற்கு முன் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்த இருவரும் முதலாவதாக இடம் பெற்ற இருவரின் மரணம் தொடர்பில் சந்தேக நபர்களாவர்.

எவ்வாறாக இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. சம்பவம் தொடர்பில் துரித விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம்.

இந்தச் சம்பவத்தை வழி நடத்தியவர் வெளிநாட்டில் இருக்கின்றார். அவருக்கு எதிராக நாம் சிவப்பு எச்சரிக்கையைப் பெற்றுள்ளோம். – எனத் தெரிவித்தார்.

இதேவேளை மன்னார் நீதிமன்றத்தின் முன்னால் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்க நான்கு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.